புதுச்சேரி அரசு
பள்ளிக் கல்வி இயக்ககம்
செய்திக் குறிப்பு

## அரசு மேனிலைப் பள்ளிகளில் பதினோராம் வகுப்புச் சேர்க்கைக்கான விண்ணப்பம் வழங்குதல்

2017-18 ஆம் கல்வி ஆண்டில் புதுச்சேரி பகுதியில் உள்ள அரசினர் மேல்நிலைப் பள்ளிகளில் பதினோராம் வகுப்பு மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் 19.05.2017 முதல் அனைத்து அரசினர் மேல்நிலைப் பள்ளிகளிலும் விநியோகிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 11-ம் வகுப்பில் சேர விரும்பும் மாணவ/மாணவியர்கள் எந்தெந்தப் பள்ளிகளில் சேர விரும்புகின்றனரோ அப்பள்ளிகளில் தனித் தனியே விண்ணப்பத்தினைப் பெற்று பூர்த்தி செய்து, பூர்த்தி செய்த விண்ணப்பத்தினை 26.05.2017 அன்று மாலை 4.00 மணிக்குள் இணையதள மதிப்பெண் நகலையும் (Print Out) நிரந்தர ஒருங்கிணைந்த சான்றிதழ் (PIC) மாற்று சான்றிதழையும் (Transfer Certificate) இணைத்து அந்தந்த பள்ளிகளிலேயே சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். ஒரு மாணவர் விரும்பினால் எத்தனை பள்ளிகளில் வேண்டுமானாலும் விண்ணப்பிக்கலாம்.

அவ்விண்ணப்பங்கள் பள்ளிகளில் பரிசீலனை செய்யப்பட்டு 31.05.2017 முதல் பதினோராம் வகுப்புச் சேர்க்கை அந்தந்த பள்ளிகளிலேயே நடைபெறும்.

**தகவல்கள்**

| வ.எண் | விவரம் | தேதி |
|---|---|---|
| 1 | விண்ணப்பங்கள் தர ஆரம்பித்தல் | 19.05.2017 |
| 2 | விண்ணப்பங்கள் ஒப்படைக்க கடைசி நாள் | 26.05.2017 |
| 3 | முதல் கலந்தாய்வு நாள் | 31.05.2017 |
| 4 | XI ம் வகுப்பு துவங்கும் நாள் | 05.06.2017 |

ஜெ. கிருஷ்ணராஜ்
இணை இயக்குநர்

இந்தச் செய்திக் குறிப்பினைத் தங்கள் நாளேட்டில் /தொலைக்காட்சியில் வெளியிட அன்போடு வேண்டுகிறேன்.

ஜெ. கிருஷ்ணராஜ்
இணை இயக்குநர்

இடம்: புதுச்சேரி
தேதி: 22.05.2017